# தகவல்கள்

## KSB வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கு முன்பும் பின்பும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

Kantonsspital Baden AG
CH-5404 Baden

Anästhesie-Sprechstunde
Telefon +41 (0)56 486 31 46
ipas.chirurgie@ksb.ch

www.ksb.ch

மயக்குவிக்கும் நடைமுறையில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் அல்லது பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ள உங்கள் செயற்பாட்டின் மூலம் ஒத்துழைக்க முடியும். பின்வரும் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைக் கவனத்தில் எடுப்பதனூடாக இடையில் ஏற்படக்கூடிய தடங்கல்களிலிருந்து முற்பாதுகாத்துக்கொள்ள தயவுசெய்து நீங்கள் உதவி செய்யுங்கள்.

### உணவு உட்கொள்ளாதிருத்தல்

வேறுவிதமாக தீர்மானிக்கப்பட்டிருந்தால் அன்றி, உணவு உட்கொள்ளாதிருத்தலில் பின்வரும் விதிமுறைகள் அமுலில் இருக்கும்:

- சத்திரசிகிச்சை நாளில் வருகைதருவது:
  - ↳ வருகைதருவதற்கு 6 மணித்தியாலம் முன்பு வரை வழமைபோன்று உண்ணவோ குடிக்கவோ அனுமதியுண்டு.
  - ↳ வருகைதருவதற்கு 2 மணித்தியாலம் முன்பு வரை நீங்கள் தெளிவான நீர்ப் பதார்த்தங்களை மட்டுமே அருந்தலாம் (வாயு ஏற்றப்பட்ட அல்லது வாயு ஏற்றப்படாத நீர், சுவையூட்டிய தேநீர் அல்லது கோப்பி, பால் /பால்பொருள் கலக்காமல்)
  - ↳ விதிவிலக்கு: அனுமதிக்கப்பட்ட மருந்துகளை ஒரு முறடு நீருடன் உட்கொள்வது அனுமதிக்கபட்டுள்ளது.
  - ↳ திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சையில் எதிர்பாராத தாமதங்கள் ஏற்படலாம், எனவே வருகை தருவதற்கு 2 மணித்தியாலம் முன்பாக ஒருசில குவளை நீரை அருந்தி வருமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். இது சத்திரசிகிச்சையின் முன்பும் பின்பும் உங்களை திடகாத்திரமாக வைத்திருக்க உதவும்.
- சத்திரசிகிச்சைக்கு ஒரு நாள் முன்பாக வருகைதரல்:
  - ↳ வேறு விதமாக தீர்மானிக்கப்பட்டிருந்தால் அன்றி, நீங்கள் உணவு உட்கொள்ளாது வர வேண்டிய அவசியமில்லை.

### மருந்துகள்

- நீங்கள் எடுக்க வேண்டிய அனைத்து மருந்துகளையும் வரும்நாளில் கொண்டு வரவும்.
- மயக்குவதற்குப் பொறுப்பான வைத்தியருடன் முன்பு கலந்துரையாடியதற்கும் சத்திரசிகிச்சை நாளிற்கும் இடைப்பட்ட காலத்தில் உங்கள் மருந்துகளில் அல்லது உங்கள் உடல்நலனில் மாற்றம் ஏற்பட்டிருந்தால், தயவுசெய்து மயக்குவதற்குப் பொறுப்பான வைத்தியரோடு **056 486 31 44** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்
- மயக்குவதற்குப் பொறுப்பான வைத்தியர் உங்களுக்கு கூறியவாறு, காலை மருந்துகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

…………………………………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………………………………

### நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்கள்

- கழற்றக்கூடிய நகைகள் மற்றும் வேறு பெறுமதியான பொருட்களை வீட்டில் விட்டுவிடுங்கள்.
- இருந்தும் நீங்கள் வைத்தியசாலைக்கு நகைகள் மற்றும் வேறு பெறுமதியான பொருட்களை எடுத்துச் சென்றால், சத்திரசிகிச்சை வேளையில் உங்கள் அறையில் உள்ள உங்களது தனிப்பட்ட பாதுகாப்புப் பெட்டகத்தில் பூட்டிவைத்துப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- விளையாடும் எலக்ரோனிக் கருவிகள் மற்றும் தொழில் சம்பந்தமான பொருட்கள் வைத்தியசாலையில் நேரம் போக்குவதற்கு உகந்தவை, ஆனால் இலகுவாக காணமற்போகக் கூடியவை. பாதுகாப்பாக வைத்திருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- பாடல்களைக் கேட்கும் கருவிகள் (MP3–player, Smartphones im Flugmodus) திட்டமிட்ட சத்திரசிகிச்சை அறையின் மயங்கவைக்கும் இடத்திற்கு (OP) எடுத்துச் செல்லலாம். அவை தொலைந்தாலோ அல்லது பாதிப்படைந்தாலோ எவ்வித நட்டஈடும் வழங்கப்பட மாட்டாது.
- உடம்பில் குத்தியிருக்கும் உலோகங்களால் எரிகாயங்கள் ஏற்படலாம். கழற்றக்கூடியவற்றை வீட்டில் விட்டுவிடுங்கள். அப்படியில்லாவிடின்வைத்தியரிடம் இதுபற்றி அறிவித்துக் கொள்ளுங்கள். எரிகாயங்கள் ஏற்பட்டாலோ அல்லது தொலைந்து போனாலோ எவ்வித இழப்பீடும்வழங்கப்படாது.

### பார்ப்பது– மற்றும் கேட்பதற்கான உபகரணங்கள்

- கண்ணாடி மற்றும் செயற்கைக் கண்வில்லைகள் (Kontaktlinsen) சத்திரசிகிச்சை அறைகளுக்குள் (OP) எடுத்து வர முடியாது, ஆனால் பார்வை மிகவும் குன்றியவர்களுக்கு அனுமதியுண்டு.
- உங்களது கேட்பதற்கு உதவும் கருவியை, முழுமையாக இல்லாமல் பகுதியாக மயக்கும் வேளையில் மட்டும் (OP) எடுத்து வரலாம்
- அவை தொலைந்தாலோ அல்லது பாதிப்படைந்தாலோ எவ்வித நட்டஈடும் வழங்கப்பட மாட்டாது.

### சுகாதாரம்

- தயவுசெய்து சத்திரசிகிச்சைக்கு நீங்கள் நன்கு துப்பரவாக வாருங்கள் (குளிப்பது, பொக்கிளைத் துப்பரவாக்குவது உட்பட),

FAMILIE Erwachsene

அத்துடன்முகப்பூச்சு இடாமலும் உடலுக்கு எவ்வித கிறீம்ஃலோசன்களைப் பூசாமலும் வரவேண்டும்.

- நீங்கள் ஆகக்குறைந்தது ஒரு விரலுக்காவது நிகச் சாயம் பூசாது தவிருங்கள்.

## செயற்கைப் பற்கள்

- செயற்கைப் பற்கள் அல்லது பகுதியான செயற்கைப் பற்கள் சத்திரசிகிச்சையின்போது கழரக்கூடும், காயங்களை ஏற்படுத்தக்கூடும், உடைந்துபோகக்கூடும் அல்லது தொலைந்து போகக்கூடும்.
- இக்காரணத்தால் செயற்கைப் பற்கள் சத்திரசிகிச்சைக்கு முன்பாக கழற்றப்பட்டு அதற்கேற்ற விசேடமாக, பெயர் எழுதப்பட்ட பாத்திரத்தில் நோயாளர் அறையில் வைத்துவிட வேண்டும்.

## சத்திரசிகிச்சை நாளன்று வருகைதரல்

- அறிவிக்கப்பட்ட நேரத்திற்கு நோயாளர்களை பதிவுசெய்யும் இடத்திற்கு (Patientenaufnahme) சமுகமளிக்கவும், அங்கிருந்து ஏற்கனவே உங்களை எதிர்பார்த்துள்ள சிகிச்சைப் பிரிவில் உள்ள உங்கள் அறைக்கு அனுப்பி வைக்கப்படுவீர்கள்.

## சத்திரசிகிச்சையின் முன்பாக

- நீங்கள் உணவு உட்கொள்ளாமல் இருக்கின்றீர்களா மற்றும் உங்களுக்குத் தேவையான மருந்துகளை எடுத்துக் கொண்டீர்களா என்பதை தாதிகள் பரிசோதித்துக் கொள்வர்.
- உங்களது உடுப்புகள் மற்றும் பொருட்களை வைத்தபின்பு தயவுசெய்து உடைகளை மாற்றிக் கொள்ளுங்கள்.
- தீர்மானிக்கப்பட்ட நேரத்திற்கு நீங்கள் சத்திரசிகிச்சைப் பிரிவிற்கு (OP) கொண்டு செல்லப்படுவீர்கள்.

## சத்திரசிகிச்சையின் பின்பாக

- சத்திரசிகிச்சையின் பின்பு சிலமணி நேரங்களுக்கு மிக கவனமாக அவதானித்துக் கொள்ளும் அறையில் நீங்கள் தங்க வைக்கப்படுவீர்கள்.இரத்த அழுத்தம், இதய– மற்றும் சுவாச சுற்றோட்டம் ஒழுங்காகவும், நோவு இல்லாமல் நன்கு பராமரிக்கப்பட்டபின், நீங்கள் மீண்டும் நோயாளர் பிரிவிற்கு மாற்றப்படுவீர்கள்.
- நீங்கள் நோவையோ அல்லது குமட்டலையோ உணர்வீர்களாக இருந்தால் தயவுசெய்து நேரகாலத்துடன் அறிவித்துக் கொள்ளுங்கள். இது கவனமாக அவதானித்துக் கொள்ளும் அறையில் தங்கியிருக்கும்போதும் அத்துடன் பின்பு நோயாளர் பிரிவில் இருக்கும்போதும் பொருந்தும்.நீங்கள் உணர்வதை எவ்வளவு விரைவாக எமக்குத் தெரியப்படுத்துகின்றீர்களோ, நாங்களும் அவ்வளவு விரைவாக உங்களுக்கு சிகிச்சைவழங்க முடியும்.
- உங்களது பிள்ளையின் முதல்முறையான நடைப்பயிற்சிக்கு ஒரு மருத்துவப் பராமரிப்பு நபர் உதவிபுரிவார். தயவுசெய்து தகுந்த அறிவுறுத்தல்கள் மற்றும் அவர்களது உதவிக்காகக் காத்திருங்கள

## அவசர பிரிவில் சத்திரசிகிச்சை இடம்பெற்றால் அதன்பின் நடந்துகொள்ள வேண்டிய முறைகள்

- சத்திரசிகிச்சையின் விதத்தைப் பொறுத்து, நீங்கள் அதே நாளில் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
- சத்திரசிகிச்சை மற்றும் மருந்துகளின் பின்விளைவுகள் மற்றும் மயக்கமருந்து போன்றவை குறிப்பிட்ட நேரத்திற்கு தீர்மானிக்கும் மற்றும் செயற்படும் நிலைகளை குறைவடையச் செய்யும், ஆகவே இதில் விசேட கவனம் எடுக்கவும்.
  - உங்கள் வாகனத்தை வீட்டில் நிறுத்திக் கொள்ளுங்கள், ஒருபோதும் வாகனத்தைச் செலுத்தாதீர்கள்.
  - ஒரு வயதுவந்த நபரால் நீங்கள் அழைத்துச் செல்லப்பட ஒழுங்கு செய்யுங்கள்.
  - வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்பட்ட பின்னரான 24 மணி நேரத்திற்கு எந்த வாகனத்தையும் செலுத்தாதீர்கள், எந்த ஆபத்தான இயந்திரத்தையும் இயக்காதீர்கள் மற்றும் அல்ககோல் மதுசாரத்தைக் குடிக்காதீர்கள்.
  - வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்பட்ட பின்னரான 24 மணி நேரத்திற்கு முக்கிய முடிவுகள் எதையும் எடுக்காதீர்கள் மற்றும் விசேடமாகநீங்கள் சட்ட உரிமையுள்ள கையொப்பம் எதையும் இடாதீர்கள்.
  - குறிப்பிட்ட காலத்திற்கு உடற்பயிற்சி அல்லது உடலுக்கு கடினமான பழுவைக் கொடுக்கும் வேலைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

## வீட்டிற்குச் சென்றபின் சிக்கல்கள் ஏற்பட்டால்

வீட்டிற்குச் சென்றபின் சிக்கல்கள் ஏற்பட்டால் உதாரணமாக கடினமான நோவு, குமட்டல், சோர்வுடன் வியர்த்தல் மற்றும் வெளிறுதல், அல்லது இரத்தம் வெளியேறுவதை அவதானித்தால், பொறுப்பு வகித்த வைத்திய நிலையத்தில் கடமையிலிருக்கும் வைத்தியருக்கு நீங்கள் அறிவித்துக் கொள்ளுங்கள் (சத்திரசிகிச்சைப் பகுதி, இரத்தக் குழாய் சத்திரசிகிச்சைப் பகுதி, எலும்பு நோய்களுக்கான பகுதி, சிறுநீரக நோய்களுக்கான பகுதி, பெண் உறுப்பு நோய்களுக்கான பகுதியை வரவேற்பு நிலையத் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ளவும் 056 486 21 11)

## ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் உறுதிப்படுத்துதல்

மேலுள்ள விதிமுறைகளை வாசித்ததுடன் அவற்றை விளங்கிக்கொண்டதாக இத்தால் கையொப்பமிடுபவர் உறுதிசெய்கிறார். இந்த விதிமுறைகளை கவனத்தில் எடுக்காததால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு, மாநில வைத்தியசாலை Baden AG யை பொறுப்பு கூறமுடியாது.

| | |
|---|---|
| Baden, ………………..…… | ………………………………………..……. |
| (திகதி) | (நோயாளி/நோயளரின் அல்லது சட்டரீதியான பிரதிநிதியின் கையொப்பம்) |